


**REVISION TEST BATCH STARTS ON 4/8/24 (SUNDAY)**

**FOR MORE DETAILS : WHATSAPP - 8438233722**

# ஏழாம் வகுப்பு தமிழ் இயல் – 7

1.பாரி மகளிரான அங்கவை, சங்கவை என்போர் பாரியின்
அ)மனைவியர் ஆ)சகோதரியர்
இ)உறவினர் ஈ)புதல்வியர்

2. ‘வறந்திருந்த காலத்தும்’ இத்தொடரில் வறந்திருந்த என்ற சொல்லின் பொருள்
அ)வந்திருந்த ஆ)வராது இருந்த
இ)வறண்டிருந்த ஈ)வற்றியிருந்த

3.பாரிமகளிரிடம் இரந்து நின்றவர்கள் யார்?
அ)விறலியர் ஆ)கூத்தர்கள்
இ)புலவர்கள் ஈ)பாணர்கள்

4.முன்றுறை அரையனாரின் காலம்
அ)பொ.ஆ.மு.நான்காம் நூற்றாண்டு
ஆ)பொ.ஆ.நான்காம் நூற்றாண்டு
இ)பொ.ஆ.மு.மூன்றாம் நூற்றாண்டு
ஈ)பொ.ஆ.இரண்டாம் நூற்றாண்டு

5.முன்றுரை அரையனார் சமண சமயத்தை சார்ந்தவர் என்பதை எதன் மூலம் அறியலாம்?
அ)செய்யுள் ஆ)கடவுள் வாழ்த்து
இ)ஆசிரியர் குறிப்பு ஈ)முன்னுரை

6.நீருலையில் - இச்சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது
அ)நீரு +உலையில் ஆ)நீர் +இலையில்
இ)நீர் +உலையில் ஈ)நீரு +இலையில்

7.தவறான இணையைத் தேர்வு செய்க.
அ)நாற்று – நடுதல் ஆ)நீர் பாய்ச்சுதல்
இ)கதிர் - அறுத்தல் ஈ)களை – எடுத்தல்

8.யாருடைய இரண்டாவது தலைநகரமாக திருநெல்வேலி விளங்கியது?
அ)மூவேந்தர் ஆ)பாளையக்காரர்கள்
இ)பல்லவர்கள் ஈ)பாண்டியர்கள்

9.திருநெல்வேலி என்பதனை நெல்லை என வழங்குவது
அ)இலக்கணப் போலி ஆ)இலக்கணமுடையது
இ)மரூஉ ஈ)மங்கலம்

10.திருநெல்வேலி குறித்த சரியான தொடர் எது/எவை?
1.இது மலை வளம் மிகுந்த பகுதியாகும்.
2.பொதிகை மலை இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது.
3.முற்காலத்தில் வேணுவனம் என்று அழைக்கப்பட்டது.
அ)அனைத்தும் சரி ஆ)1 மட்டும் சரி
இ)1,2 மட்டும் சரி ஈ)2,3 மட்டும் சரி

11.தண்பொருநைப் புனல் நாடு என்று திருநெல்வேலியை புகழ்ந்து பாடியவர்
அ)சேக்கிழார் ஆ)திருஞானசம்பந்தர்
இ)திருநாவுக்கரசர் ஈ)இளங்கோவடிகள்

12.திரிகூட மலை என்று அறியப்படும் மலை எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?
அ)கன்னியாகுமரி ஆ)தேனி
இ)நெல்லை ஈ)பொள்ளாச்சி

13. "பொதியி லாயினும் இமய மாயினும்
பதியெழு அறியாப் பழங்குடி" என்று பாடியவர்
அ)திருஞானசம்பந்தர் ஆ)இளங்கோவடிகள்
இ)திரிகூடராசப்பர் ஈ)கபிலர்

14."புகழுறும் திருநெல்வேலி" என்ற திருஞானசம்பந்தரின் வரியில் விடுபட்ட சொல்லைக் கண்டறிக
அ)திசையெல்லாம் ஆ)உலகெலாம்
இ)திக்கெல்லாம் ஈ)பாரெல்லாம்

15.திருநெல்வேலிப் பகுதியை வளம் செழிக்கச் செய்யும் ஆறு
அ)தண்பொருநை ஆ)சிற்றாறு
இ)மணிமுத்தாறு ஈ)வைகை

16.தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகளில் தவறானதைத் தேர்வு செய்க.
அ)கடனாநதி ஆ)சேர்வலாறு
இ)மணிமுத்தாறு ஈ)அமராவதி

17.சரியான கூற்றுகளைத் தேர்வு செய்க.
1.திருநெல்வேலி மாவட்டத்தின் பொருளாதாரத்தில் முதன்மையான பங்கு வகிப்பது உழவுத் தொழில்.
2.தாமிரபரணி ஆற்றின் மூலம் இங்கு உழவுத்தொழில் நடைபெறுகிறது.
3.இங்கு ஆற்றுப் பாசனம் செழித்து இருப்பதால் குளம் மற்றும் கிணற்றுப் பாசனம் பயன்பாட்டில் இல்லை.
4.முப்பருவங்களில் இங்கு பயிரிடப்படுகிறது.

அ)1,2 மட்டும் ஆ)3,4 மட்டும்
இ)1,2,3 மட்டும் ஈ)அனைத்தும் சரி

18.நெல்லை மாவட்டம் முதலிடம் வகிப்பது
அ)நெல் உற்பத்தி ஆ)வாழை உற்பத்தி
இ)கரும்பு உற்பத்தி ஈ)நெல்லி உற்பத்தி

19.நெல்லை மாவட்டத்தில் நடைபெறும் தொழில்களில் தவறானதைத் தேர்வு செய்க.
அ)வாழை பயிரிடல் ஆ)நெல்லி உற்பத்தி
இ)மீன்பிடித்தொழில் ஈ)இவற்றில் எதுவுமில்லை

20.தண்பொருநை ஆறு கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்துள்ள துறைமுகம்
அ)பூம்புகார் ஆ)கொற்கை
இ)தூத்துக்குடி ஈ)தொண்டி

21.கொற்கையில் விளைந்த எந்த நாட்டு முத்து உலகப்புகழ் பெற்றதாக விளங்கியது?
அ)சேரநாடு ஆ)பாண்டிய நாடு
இ)சோழநாடு ஈ)இவையனைத்தும்

22.யவனர்கள் என்று அழைக்கப்படுவோர் எந்த நாட்டைச் சார்ந்தவர்கள்?
அ)கிரேக்கம், ரோமாபுரி ஆ)கிரேக்கம், துருக்கி
இ)அரபு, சீனா ஈ)சீனா, கிரேக்கம்

23.திருநெல்வேலியில் அமைந்துள்ள நெல்லையப்பர் கோவிலில் எப்போது திருவிழா நடைபெறும் என்று திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்?
அ)வாரந்தோறும் ஆ)திங்கள்தோறும்
இ)ஆண்டுதோறும் ஈ)தினந்தோறும்

24. “கொற்கையில் பெருந்துறை முத்து” - இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல்
அ)நற்றிணை ஆ)ஐங்குநுறூறு
இ)அகநானூறு ஈ)புறநானூறு

25.முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்றுரை - இவ்வடிகள் எந்த நூலில் பாடப்பட்டுள்ளது?
அ)நற்றிணை ஆ)அகநானூறு
இ)புறநானூறு ஈ)இவற்றில் எதுவுமில்லை

**REVISION TEST BATCH STARTS ON 4/8/24 (SUNDAY)**
**FOR MORE DETAILS : WHATSAPP - 8438233722**

26.பொருத்துக

அக்கசாலை - 1.தானியம்

கூழைக்ககடைதெரு – 2.பொன் நாணயங்கள்

காவற்புரைதெரு – 3.காவல்துறை

அ)1 2 3 ஆ)3 1 2

இ)3 2 1 ஈ) 2 1 3

27.நின்றசீர் நெடுமாறன் என்னும் பாண்டிய மன்னனின் தேவி மங்கையர்க்கரசியை நெல்லை மக்கள் வரவேற்ற இடம்

அ)பாண்டியபுரம் ஆ)திருமங்கை நகர்

இ)பேட்டை ஈ)வீரராகவபுரம்

28.தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு என்று அழைக்கப்படுவது

அ)திருநெல்வேலி ஆ)பாளையங்கோட்டை

இ)இவை இரண்டும் ஈ)இவற்றில் எதுவுமில்லை

29.அரியநாயகர் யாருடைய தளவாயாக விளங்கினார்?

அ)பாண்டிய மன்னன் ஆ)பாளையக்காரர்கள்

இ)நாயக்க மன்னர் ஈ)சோழமன்னன்

30.இளங்கோவடிகள் எந்த மலைக்கு முதன்மை கொடுத்து தனது நூலில் பாடியுள்ளார்?

அ)இமயமலை ஆ)கொல்லிமலை

இ)விந்திய மலை ஈ)பொதிகை மலை

31.தேசிகவிநாயகனார் பிறந்து வளர்ந்த இடம்

அ)திருநெல்வேலி ஆ)கன்னியாகுமரி

இ)மதுரை ஈ)பாளையங்கோட்டை

32.வெங்கடேசுவர எட்டப்பராஜாவைப் பற்றிப் பல பாடல்களைப் பாடியவர்

அ)பாரதியார்

ஆ)கவிமணி

இ)பலபட்டடை சொக்கநாதப் புலவர்

ஈ)கடிகைமுத்துப் புலவர்

33.எந்த இரு ஆறுகள் கலக்கும் இடம் சீலவப்பேரி என்று அழைக்கப்படுகிறது?

1.மணிமுத்தாறு 2.சிற்றாறு 3.சேர்வலாறு 4.தாமிரபரணி

அ)1,4 ஆ)2,3 இ)3,4 ஈ)2,4

34.கொற்கையில் நடைபெற்ற வியாபாரம் பற்றி குறிப்பிடும் நூல் எது?
அ)முக்கூடற்பள்ளு ஆ)முத்தொள்ளாயிரம்
இ)அகநானூறு ஈ)சிலப்பதிகாரம்

35.பொருத்துக
கழுகுமலை – 1.திருஞானசம்பந்தர்
காயல்பட்டிணம் - 2.அண்ணாமலையார்
சீவைகுண்டம் - 3.பிள்ளைப்பெருமாள்
சங்கரன்கோயில் - 4.அழகிய சொக்கநாதர்
குற்றாலம் - 5.சீதக்காதி
அ) 2 1 3 4 5 ஆ) 3 4 2 1 5
இ)5 3 2 4 1 ஈ)2 5 3 4 1

36. “கோமான் அழகமர் மால்சீதக் காதி கொடைக்கரத்துச்
சீமான் இறந்திட்ட போதே புலமையும் செத்ததுவே”
இவ்வடியில் குறிப்பிடப்படும் சீதக்காதி என்பவர்
அ)வள்ளல் ஆ)புலவர்
இ)வாணிகர் ஈ)அரசர்

37.சுமார் எத்தனை வருடங்களுக்கு முன்பு திருஞானசம்பந்தர் குற்றாலத்திற்கு வருகை தந்தார்?
அ)1500 ஆ)1200 இ)1400 ஈ)1300

38. “குற்றாலத் துறைகின்ற கூத்தாஉன் குரைகழற்கே!
குற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே!” என்று பாடியவர்
அ)மாணிக்கவாசகர் ஆ)திருஞானசம்பந்தர்
இ)அண்ணாமலையார் ஈ)திரிகூடராசப்பர்

39.திருநெல்வேலி சீமை என்று குறிப்பிடப்படும் பகுதி இவற்றை உள்ளடக்கியப் பகுதியாகும்
அ)திருநெல்வேலி, கன்னியாகுமரி
ஆ)திருநெல்வேலி, மதுரை
இ)திருநெல்வேலி, தூத்துக்குடி
ஈ)திருநெல்வேலி மாவட்டம்

40.டி.கே.சி பற்றிய சரியான கூற்றுகளைத் தேர்வு செய்க.
1.டி.கே.சிதம்பரனார் வழக்கறிஞராக பணியாற்றியவர்.
2.இரசிகமணி என்று சிறப்பிக்கப்பட்டவர்.
3.தான் பயின்ற பள்ளியில் வட்டத்தொட்டி என்னும் பெயரில் இலக்கியக் கூடங்கள் நடத்தி வருகிறார்.

4.கடித இலக்கியத்தின் முன்னோடி, தமிழிசைக் காவலர், வளர்தமிழ் ஆர்வலர் என்று புகழப்படுகிறார்.
5.இவர் இயற்றிய நூல் இதய ஒலி ஆகும்.

அ)அனைத்தும் சரி
ஆ)1,2,3,4 மட்டும் சரி
இ)1,2,4,5 மட்டும் சரி
ஈ)2,3,4 மட்டும் சரி

41.அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை - இக்குறட்பாவில் உவமேயமாக கூறப்பட்டுள்ளது எது?

அ)பூமி தன்னைத் தோண்டுபவரைப் பொறுத்துக் கொள்ளுதல்
ஆ)நம்மை இகழ்ந்து பேசுபவரைப் பொறுத்துக் கொள்ளுதல்
இ)பூமி
ஈ)இவற்றில் எதுவுமில்லை

42.கீழ்க்கண்டவற்றில் எது உவம உருபு அல்ல?

அ)நனி
ஆ)புரைய
இ)மான
ஈ)கடுப்ப

43.உவமை ஒரு தொடராகவும் உவமேயம் ஒரு தொடராகவும் வந்து இடையில் உவம உருபு மறைந்து வருவது

அ)இல்பொருள் உவமையணி
ஆ)உவமையணி
இ)எடுத்துக்காட்டு உவமையணி
ஈ)உருவக அணி

44.கொம்பு முளைத்த குதிரை போல - இத்தொடரில் பயின்று வந்துள்ள அணி யாது?

அ)இல்பொருள் உவமையணி
ஆ)உவமையணி
இ)எடுத்துக்காட்டு உவமையணி
ஈ)இவற்றில் எதுவுமில்லை

45.மாங்கனித் திருவிழா நடைபெறும் ஊர் எது?

அ)சேலம்
ஆ)வேளாங்கண்ணி
இ)காரைக்கால்
ஈ)பாளையங்கோட்டை

46.உள்ளங்கை நெல்லிக்கனி போல - இத்தொடருக்கான பொருள் யாது?

அ)அரிய செயல்
ஆ)யாருக்கும் கிடைக்காதது
இ)எளிதில் விளங்குவது
ஈ)எளிதில் மறையக்கூடியது

47. Cultivation - இச்சொல்லுக்கான கலைச்சொல் யாமு?

அ)கலப்பை
ஆ)உரமிடுதல்
இ)நீர்ப்பாசனம்
ஈ)பயிரிடுதல்

48.குற்றால முனிவர் என்று அழைக்கப்படுபவர்
அ)திரிகூடராசப்பர் ஆ)திருஞானசம்பந்தர்
இ)இளங்கோவடிகள் ஈ)டி.கே.சிதம்பரனார்

49.காவடி சிந்து என்ற நூலின் ஆசிரியர்
அ)அருணகிரிநாதர் ஆ)நமச்சிவாயப்புலவர்
இ)சொக்கநாதப்புலவர் ஈ)அண்ணாமலையார்

50.கிணற்றுத்தவளை போல - இத்தொடருக்கான சரியான பொருள் யாது?
அ)அறியாமை ஆ)அறிவு
இ)திமிர்பிடித்தவன் ஈ)ஆழமாக பதியும் செயல்

**REVISION TEST BATCH STARTS ON 4/8/24 (SUNDAY)**
**FOR MORE DETAILS : WHATSAPP - 8438233722**

TNPSC_PRE_COACHING